உ

சிவமயம்

# திருவருள்

★ அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்வோம் ★

மலர் 2 | இந்துசமய சஞ்சிகை | இதழ் 8



திருச்சிற்றம்பலம்

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோல
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே."

சிவானந்தமாலை

**THIRUVARUL - A** Hindu Magazine - Vo. 2 No. 8

ANNUAL SUBSCRIPTION Rs. 15/-

வாழையடி வாழையடியாக வந்து

எம்மை உய்விக்கும்

திருத்தொண்டர் திருக்கூட்டம்

தாள் பணிவோம்

**K. பாலகிருஷ்ணன்**

312, நீர்கொழும்பு வீதி

பேலியாகொடை.

தொலைபேசி எண்: 070 — 284


Mr. P. Murugesu Art-Teacher


அன்பளிப்பு

மாணவர் பிரதிநிதிகள்


உ

சிவமயம்

# திருவருள்

அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்வோம்


மலர் 2 | இந்துசமய சஞ்சிகை | இதழ் 8


## பொருளடக்கம்


| இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | நமச்சிவாயத் திருப்பதிகம் | 1 |
| 2 | எமது கருத்து ... | 5 |
| 3 | கடவுள் ... <br> ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் | 7 |
| 4 | தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதோ ... <br> சிவனருட் செல்வர் | 13 |
| 5 | நல்லூர்க் கைலாசநாதர் கோயில் <br> -க. சி. குலரத்தினம் ... | 17 |
| 6 | கைலாசப்பிள்ளையார் ஊஞ்சல் ... | 29 |
| 7 | மனக்கவலை மாற்றவழி <br> பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை ... | 31 |

# திருவருள்

**யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**

ஆசிரியர் குழு: திரு. V. சதாசிவம்
திரு. கு. குருசுவாமி
திரு. A. V. சர்மா
திரு. L. P. சாமி
திரு. து. சிவசுந்தரம்
திரு. ம. இரத்தினசபாபதி
திருமதி. ம. யோகநாதன்

பதிப்பாளர்: திரு. R. வைத்தமாநிதி

நிர்வாகம்: திரு. S. யோகநாதன்
திரு. ம. கனகசபாபதி
திரு. K. செல்லையா

விளம்பரம்: திரு. T. M. ஆவுடையப்பன்
திரு. P. பாலசுந்தரம்
திரு. K. குமாரசுவாமி
திரு. P. K. சந்திரசேகரம்

விநியோகம்: திரு. S. பத்மநாதன்
திரு. D. சுப்பிரமணியம்
திரு. க. இளையதம்பி
திரு. R. திருலோகசுந்தரம்

தங்களது காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை ஆகியவற்றை R. வைத்தமாநிதி என்ற பெயருக்கே அனுப்பி வையுங்கள். கடிதங்கள், கட்டுரை மற்றும் விஷயதானங்கள் ஆகியவற்றை இல. 5, கன்னாரத்தெரு, கொழும்பு-13 என விலாசமிட்டு அனுப்புங்கள்.

**வருட சந்தா ரூபா 15-00**

சிவமயம்



சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய

# நமச்சிவாயத் திருப்பதிகம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்கும் அடியார்களுக்கு இறைவன்-அடியான், எழியான், தோழன் என்ற ரீதியில் திருவருள் புரிந்த சம்பவங்கள் நமது திருத்தொண்டர் புராணத்தில் வெகு நுணுக்கமாகவும், அருமையாகவும் பேசப்பட்டிருத்தலை அறிகிறோம் - அதனாலேதான்-தடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தரருக்கு முதலடி எடுத்துக்கொடுத்து நம்மைப் "பித்தன்" என்றேபாடு என்று கட்டளை பிறக்கிறது. சதா அவனை நினைந்து நினைந்து பேரின்பத்துள் மூழ்கி நிற்கும் அடியவர் இடத்து-அவன்; பித்துப் பிடித்து அணுக்கராய், தொண்டனாய் வந்தான் என்று அறிகிறோம்.

ஆனால் - நாமும் இந்த உலகியல் வாழ்க்கையில் நின்று கொண்டே அவனை மறவாமல் இருப்பதற்குரிய ஒரு வழி இருக்கிறது - அதுதான் "நமசிவாய" என்ற நாமத்தை நெட்டுருப் பண்ணுவதாகும். அப்படிச் "சொல்லுவார்க்கில்லைத் துன்பமே" என்கின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்.

ஆதலினால் - அவனுடைய திருப்பாதத்தை பாவனை செய்துபோற்றும் பக்குவர்கள் இல்லாதபோதும் அவனுடைய நாமமாகிய "நவசிவாய" என்ற மந்திரத்தை உச்சரித்து உய்திகூடுவோமாக.

**தலம்:** **திருப்பாண்டிக் கொடுமுடி** பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின் றிருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. 1

இட்டனும்மடி யேத்துவாரிகழ்ந்
திட்டநாண்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. 2

ஓவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. 3



எல்லையில்புக ழெம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணி
கல்லையுந்திவளம் பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. 4

அஞ்சினார்க்கர ணாதியென் றடி
யேனுநான்மிக வஞ்சினேன்
அஞ்சலென் றடித் தொண்டனேற்கரு
ணல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
[illegible]ஞ்[illegible]ணிகண்ட நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. 5

ஏடுவானிளந் திங்கள்சூடினை
யென்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்ப தரைக்கசைத்த
வழகனேயந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. 6

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந்
தேன்வினைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. 7

செம்பொனேர்சடை யாய்திரிபுரந்
    தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாக
    மமர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயி
    லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயுனை நான்மறக்கினுஞ்
    சொல்லுநா நமச்சிவாயவே. 8

சாரணன்றந்தை யெம்பிரானெந்தை
    தம்பிரானென்பொன் மாமணியென்று
பேரெணாயிர கோடிதேவர்
    பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்றொழுங்கறை
    யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினுஞ்
    சொல்லுநா நமச்சிவாயவே. 9

கோணியபிறை சூடியைக்கறை
    யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப்
    பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத்
    தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவை
    சொல்லுவார்க்கில்லைத் துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

**வேலாயுதம்**

ஆன்மாக்களுக்கு முத்திகொடுக்க விரும்பும் விருப்பமாகிய இச்சாசக்தியும் அதற்கு வேண்டுபவைகளையறியும் அறிவாகிய ஞானசக்தியும் அறிந்தவை செய்யும் செயலாகிய கிரியாசக்தியும் ஆகிய மூன்று சக்திகளினடுக்கு வேலாயுதமெனவுணர்க.



# தொண்டர்கள் தோன்றவேண்டும்! தோன்றுவார்களா?

"ஆருயிர்க்கெல்லாம் அன்புடன் தொண்டு புரியும் ஆர்வத்தை, அண்ணலே எனக்கு நீ நல்குவாயாக! என்று இறைவனை இறைஞ்சுகின்றார்" அருள்ஞானி ஒருவர்.

தொண்டு அகத்தொண்டு, புறத்தொண்டு என இருவகைப்படும். இறைவனைப் பூசித்தலும், அவன் புகழ் பாடுவதும் அகத்தொண்டாகும். மக்கள் நிறைவேற்றும் பிறபணிகள் புறத்தொண்டாகும்.

அறியாமை மிகுந்ததோர் ஒரு காரியத்தைச் செய்யப்புகும் பொழுது அதனால் தமக்கு ஏற்படும் இலாபத்தைப் பெரிதும் விரும்பியும், பேர், புகழ் ஆகியவற்றால் உந்தப்பெற்றும் அதனில் ஈடுபாடு காட்டுகின்றார்கள். ஆனால் அறிவாழிகள் கருமபலனில் சொந்த இலாபத்தைக் கருதாது உலக நன்மையைக் குறிக்கோளாகக்கொண்டு கருமம் ஆற்றுகிறார்கள். தமக்கு நன்மையில்லை என்பதால் திறமை விசுவாசம், கலைப்பற்ற ஆர்வம், உணர்வூட்டும் உண்மையான ஆனந்தம், பயம் நீக்கிய தன்மை ஆகியவற்றை இழந்து அவர்கள் கருமம் ஆற்றுவதில்லை.

இவ்வாறான தொண்டின் பெருமையை பகவத்கீதை போன்ற சமயநூல்கள் பறைசாற்றி நிற்கின்றன.

அப்படியாயின் தொண்டு புரிவதால் என்ன பலன் ஏற்படுகிறது என்ற கேள்வி எழலாம். தொண்டு செய்பவரின் மனத்தை விட்டு வேற்றுமை அகல்கிறது. மன்னுயிரைத் தன்னுயிர் போல் அவன் கருதுகிறான். வேறாக இருந்தவன் தொண்டின் மூலம் தனக்கு உற்றவனாய் விடுகிறான். இங்ஙனம் ஒற்றுமை நிலைநாட்டப்படுகிறது. ஐக்கிய உணர்வு வளர்கிறது அதனின்று நல்லறிவு ஓங்குகிறது.

தொண்டு செய்யும் பெருவாய்ப்பு எல்லாருக்கும் சொந்தமானது. அதைப் பயன்படுத்தாதவன் வாழ்ந்தும் வாழாதவனாகிறான்.

எமது சமய வரலாற்றில் நாயன்மார், அரசர், அரசிகள் மந்திரிகள், படைத்தலைவர் மற்றும் பல்வேறு நிலையில் இருந்தோரும் தன்னலமற்ற தொண்டு ஆற்றியிருக்கிறார்கள் என்பதைப் பெரியபுராணம், பாகவதம் ஆதியன தெளிவாகக் காட்டுகின்றன. பெரும்பான்மையோர் தொண்டில் ஈடுபட்டு வாழ்ந்ததாலேதான் எமது சமயம் உன்னத நிலையில் இருந்தது.

நாளடைவில் சுயநலம் தலைதூக்கத் தொடங்கி விட்டதால் பலரும் மக்கள் குலம் வாழ வழிவகுக்கும் தொண்டினை ஆற்றாது விட்டுவிட்டனர். எனவே இன்று எமது சமுதாய வாழ்க்கை சீர்கெட்டுக் காணப்படுகிறது.

மீண்டும் எமது சமூகம் சிறப்புற வேண்டியது மிக அவசியமாகும். இக்குறிக்கோளை அடையத் தொண்டர்கள் பலர் எம்மத்தியில் தோன்றவேண்டும். வரலாற்றில் அகத்தொண்டிற்கு இலக்கணமாகத் திகழும் கண்ணப்பன், மீராபாய், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள், திருமுறை அமுதை வாரி வாரி வழங்கிய நாயன்மார் போன்றோரும்; புறத்தொண்டு புரிந்த மங்கையர்க்கரசி, குலச்சிறையார், திலகவதியார், பரஞ்சோதியார் போன்றோரும் நம்மிடையே உருவாக வேண்டும்.

நவீன காலத்தில் வாழ்ந்த ஆறுமுகநாவலர், அரவிந்தர், ரமணர், இராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள், சிவானந்தர், யோகசுவாமி, மறைமலையடிகள், மகாதேவா சுவாமிகள் போன்ற பெரியார்களின் ஆன்மபலத்துடன் கூடிய தொண்டர்கள் நம்மத்தியில் தோன்றி, எம்மவரை நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பது எமது பேரவாவும் பிரார்த்தனையுமாகும்.

“உண்டுஉடுத்துப் பூண்டுஇங்கு
உலகத்தார் போல்திரியும்
தொண்டர் விளையாட்டே
சுகங்காண் பராபரமே”

— தாயுமானவர்

கணபதி துணை

# ★ கடவுள் ★

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் —

உலகமாவது சித்தும் அசித்துமென இருவகைப்படும் பிரபஞ்சமாம். சித்து அறிவுடைய பொருள். அசித்து அறிவில்லாத பொருள். அசித்தென்றாலும், சடமென்றாலும் பொருந்தும் உலகம் தோன்றி நின்று அழியுங் காரியமாய் உள்ளது. ஆதலினால், உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையுஞ் செய்தற்கு ஒரு கடவுள் இருக்கிறார் என்பது நன்றாக நிச்சயிக்கப்படும்.

கடவுள் என்றும் உள்ளவர், அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர், அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிபவர், அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவருடைய அறிவு இயற்கையறிவு, ஒருவர் அறிவிக்க அறிபவரல்லர். அவர் எல்லாம் வல்லவர், அவரால் இயலாத கருமம் ஒன்றுமில்லை. அவர் அளவிடப்படாத ஆனந்தமுடையவர், தம்முடைய அநுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவரல்லர். அவர் தம்வயமுடையவர், பிறர்வயமுடையவரல்லர். அவர் உயர்வும் ஒப்பும் இல்லாதவர், அவரின் மேலானவரும் இல்லை, அவருக்கு சமமானவரும் இல்லை. அவர் சகல லோகத்துக்கும் ஒரேநாயகர். அவர் செய்யுந்தொழில்களுள் ஒன்றாயினும் அவருடைய பிரயோசனத்தைக் குறித்ததன்று. எல்லாம் ஆன்மாக்களுடைய பிரயோசனத்தைக் குறித்தவைகள். அவர் ஆன்மாக்களிடத்திலுள்ள கைம்மாறில்லாத அளவு கடந்த திருவருளே திருமேனியாக உடையவர்.

கடவுள் ஆன்மாக்கள் பொருட்டு வேதம் ஆகமம் என்னும் முதனூல்களை அருளிச் செய்தார். அவைகளிலே விதிக்கப்பட்டவைகளெல்லாம் புண்ணியங்கள். விலக்கப்பட்டவைகளெல்லாம் பாவங்கள். அவர் புண்ணியத்தைச் செய்த ஆன்

மாக்களுக்கு இன்பத்தையும், பாவத்தைச் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுப்பார். துன்பத்தைக் கொடுத்தலினால் அவரை வன்கண்ணரென்று கொள்ளலாகாது. தீமை செய்த பிள்ளைகளைப் பிதா மாதாக்கள் தண்டித்தலும், சில வியாதியாளர்களுக்கு வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும், இரும்புக்கோல் காய்ச்சிச் சுடுதலும், கண்ணிற் படலத்தை உரித்தலும் அவர்களிடத்துள்ள இரக்கத்தினாலன்றி வன்கண்மையினாலல்லவே. அதுபோலக் கடவுள் பாவஞ்செய்த ஆன்மாக்களைத் தண்டித்தல், அப்பாவத்தை ஒழித்து மேலே பாவஞ் செய்யா வண்ணம் தடுத்து அவர்களை நல்வழியிலே செலுத்தி உய்வித்தற்கு ஏதுவாதலினால் அதுவும் கருணையேயாம்.

## ஆன்மா

ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடையுடையவைகளாய், சரீரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாய், தங்களுக்கு ஒரு தலைவனை உடையவைகளாய் இருக்கும்.

ஆன்மாக்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைக்கு ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்திறந்துழலும்.

நால்வகைத் தோற்றங்களாவன: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம், என்பவைகளாம். அவைகளுள், அண்டசம் முட்டையிற்றோன்றுவன. சுவேதசம் வேர்வையிற்றோன்றுவன. உற்பிச்சம் வித்து வேர் கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற்றோன்றுவன. எழுவகைப் பிறப்புக்களாவன: தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், என்பவைகளாம். தாவரங்களென்றது மரம், செடி முதலியவைகளை.

கருப்பையிலே தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளும் பிறக்கும். முட்டையிலே பறவைகளும், ஊர்



வனவும், நீர்வாழ்வனவும் பிறக்கும் வேர்வையிலே கிருமி கீடம் பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளும் பிறக்கும். வித்தினும் வேர் கொம்பு கொடி கிழங்குகளினும் தாவரங்கள் பிறக்கும். தாவரமென்றாலும் நிலையியற் பொருளென்றாலும், அசரமென்றாலும் பொருந்தும், தாவரமல்லாத மற்றை ஆறு வகைகளும் சங்கமங்களாம். சங்கமமென்றாலும், இயங்கியற் பொருளென்றாலும், சரமென்றாலும் பொருந்தும்.

தேவர்கள் பதினொரு நூறாயிரயோனிபேதம். மனிதர்கள் ஒன்பது நூறாயிரயோனிபேதம். நாற்கால் விலங்கு பத்து நூறாயிரயோனிபேதம். பறவை பத்து நூறாயிரயோனிபேதம். நீர்வாழ்வன பத்து நூறாயிரயோனிபேதம். ஊர்வன பதினைந்து நூறாயிரயோனிபேதம். தாவரம் பத்தொன்பது நூறாயிரயோனிபேதம் ஆகத் தொகை எண்பத்து நான்கு நூறாயிரயோனிபேதம்.

ஆன்மாக்கள், தாம் எடுத்த சரீரத்துக்கு ஏற்ப, மெய், நாக்கு, மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளினாலும் சித்தத்தினாலும் அறியும் அறிவின் வகையினாலே, ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிரென அறுவகைப்படும். புல்லும் மரமும் முதலியவை பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்கள். இப்பியும் சங்கும் முதலியவை அதனோடு இரதத்தையும் அறியும் ஈரறிவுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியவை அவ்விரண்டினோடு கந்தத்தையும் அறியும் மூவறியுயிர்கள். தும்பியும் வண்டும் முதலியவை அம்மூன்றினோடு உருவத்தையும் அறியும் நாலறிவுயிர்கள். விலங்கும் பறவையும் அந்நான்கனோடு சத்தத்தையும் அறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும் மனிதர்களும் அவ்வைந்தனோடு சித்தத்தாலறியும் அறிவுமுடைய ஆறறிவுயிர்கள்.

ஆன்மாக்கள், தாம் பூமியிலே செய்த நல்வினை தீவினையென்னும் இருவகை வினைகளுள்ளும், நல்வினையின் பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கத்திலும், தீவினையின் பயனாகிய துன்பத்தை நரகத்திலும், அநுபவிக்கும். அப்படி அநு

பவித்துத் தொலைத்துத் தொலையாமல் எஞ்சி நின்ற இரு வினைகளினாலே திரும்பவும் பூமியில் வந்து பிறந்து, அவைகளின் பயன்களாகிய இன்ப துன்ப மிரண்டையும் அநுபவிக்கும். இப்படியே, நமக்கு ஒரு நிலைமை இல்லாத கொள்ளி வட்டமும் காற்றாடியும் போல, கடவுளுடைய ஆஞ்ஞையினாலே, கருமத்துக்கு ஈடாக, மேலே உள்ள சுவர்க்கத்திலும் கீழே உள்ள நரகத்திலும், நடுவே உள்ள பூமியிலும் சுழன்று திரியும்.

இப்படிப் பிறந்திறந்துழலும் ஆன்மாக்கள் தாவர யோனி முதலிய கீழுள்ள யோனிகளெல்லாவற்றினும் பிறந்து பிறந்திளைத்து, புண்ணிய மேலீட்டினாலே மனிதப் பிறப்பிலே வருதல் மிகுந்த அருமையாம். அவ்வருமை, அராயுங்காலத்து, கடலைக் கையினாலே நீந்திக் கரையேறுதல் போலும். இத்தன்மையையுடைய மனிதப்பிறப்பை எடுப்பினும், வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தை விட்டு அவை வழங்கும் புண்ணிய தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம்.

இவ்வருமையாகிய மனிதப்பிறப்பை உண்டாக்கியது உயிர்க்குயிராகிய கடவுளை மனம் வாக்குக் காயங்களினாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம் கருப்பையில் அழியினும் அழியும். பத்து மாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும். பிறந்தபின் சில காலம் வளர்ந்து அழியினும் அழியும். மூன்று வயசுக்கு மேற் பதினாறு வயசு வரையிலுள்ள பாலாவத்தையின் அழியினும் அழியும். அதற்கு மேல் நாற்பது வயசுவரையிலுள்ள தருணாவத்தையின் அழியினும் அழியும். அதற்கு மேற்பட்ட விருத்தாவத்தையின் அழியினும் அழியும். எப்படியும் இந்தச் சரீரம் நிலையின்றி அழிவது உண்மையாமே. அழியுங்காலமோ தெரியாதே. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாதுவருமோ, அதுவும் தெரியாதே. ஆதலால், இந்தச் சரீரம் உள்ள பொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங்கருணைக் கடலாகிய கடவுளை வழிபட்டு உய்யவேண்டும்.



## கடவுள் வழிபாடு:

கருணாநிதியாகிய கடவுள், புறத்திலே திருக்கோயிலுள்ளிருக்கும் - இலிங்கம் முதலிய திருமேனியும், தமது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக்கொண்டு நின்றும், அகத்திலே உயிர் இடமாகக்கொண்டு நின்றும் இங்குள்ளவர் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர் ஆதலால் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம்.

கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களின் மாத்திரம் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றையிடங்களெல்லாவற்றினும் பாலில் நெய்போல விளங்காது நிற்பர்.

கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன, அவரை மனசினாலே தியானித்தலும், வாக்கினாலே துதித்தலும், கைகளினாலே பூசித்தலும், கால்களினாலே வலம் வருதலும், தலையினாலே வணங்குதலும், செவிகளினாலே அவருடைய புகழைக் கேட்டலும், கண்களினாலே அவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்.

அன்பில்லாத வழிபாடு உயிரில்லாத உடம்பு போலும். அன்பாவது தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. கடவுளிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்களாவன, அவருடைய உண்மையை நினைக்குந்தோறும் கேட்குந்தோறும் காணுந்தோறும் தன்வசமழிதலும், மயிர்க்கால்தோறுந் திவலை உண்டாகப் புளகங்கொள்ளலும், ஆனந்தவருவி பொழிதலும், விம்மலும், நாத்தழுதழுத்தலும், உரை தடுமாறலும், அவரால் விரும்பப்படுபவைகளைச் செய்தலும், வெறுக்கப்படுபவைகளைச் செய்யாதொழிதலும் அவருடைய மெய்யடியார்களைக் காணும்பொழுது கூசாது வணங்குதலும், பிறவுமாம்.

கடவுளால் விரும்பப்படுபவைகளாவன இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன கொலை, புலாலுணல், களவு, கள்ளுணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்.

ஆன்மாக்களாகிய நாம், பிறர்வயமுடையவர்களும், சிற்றறிவு சிறுதொழிலுடையவர்களுமாய் இருத்தலினாலே, நன்மை தீமைகளை உள்ளபடி அறியவும், தீமைகளை ஒழித்து நன்மைகளையே செய்யவும் வல்லேமல்லேம். ஆதலால், தம்வயமுடையவரும் முற்றறிவு முற்றுத்தொழிலுடையவரும் ஆகிய கடவுளை வணங்கி, அவருடைய திருவருள் வசப்பட்டு ஒழுகுவோமானால், நாம் தீமைகளினின்று நீங்கி நன்மைகளைச் செய்து தம்மை வழிபட்டு உய்யும்படி அவர் நமக்கு அருள் செய்வார்.

"ஆசையறுாய் பாசம்விடா யானசிவபூசைபண்ணாய்
நேசமுட னைந்தெழுத்தை நீநினையாய் – சீசீ
சினமே தவிராய் திருமுறை களோதாய்
மனமே யுனக்கென்ன வாய்"

— சிவபோகசாரம்

---

### விநாயகர் திருவவதாரம்

தேவர்கள், கயமுகாசுரன் உண்டுபண்ணும் துன்பத்தால் வருந்திப் பரமேசுவரரிடத்திற்குப்போய் முறையிட்டார்கள். அவர்களை யிரட்சிக்க வேண்டுமென்கிற இரக்கத்தினாலே பரமேசுவரர் பார்வதியாருடன் கைலாசகிரிச்சாரலில் ஒரு சோலையின் மத்தியிலிருக்கும் சித்திர மண்டபத்திற் கெழுந்தருள அதில் எழுதியிருந்த சித்திரங்களில் ஒரு சித்திரமாயிருந்த சிவசக்தி பீரணவங்கள் பரமேசுவரருடைய அனுக்கிரகத்தினால் ஆண்யானை வடிவும் பெண்யானை வடிவமாய்ச்சேர அதனிடமாக யானை முகத்துடன் திருவவதாரமாயினார்.



# தொண்டர்தம் பெருமை . . . . . சொல்லவும் பெரிதே !

— சிவனருட் செல்வர் தொகுப்பு - கூ. இ. —

சேக்கிழார் பெருமான் தாம் இயற்றிய நாலுக்குப் பெரிய புராணம் என்று பெயர் வைக்கவில்லை. ஆனால் ஒரு குறிப்புத் தருகிறார்.

"எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாள்செவி நீழ்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்."

'உலகெலாம்'' என்று ஆண்டவன் அடி எடுத்துக் கொடுத்த பின், சேக்கிழார் பிள்ளையாரைக் குறித்துப்பாடுகின்ற பாடல் இது. கதை என்றால் புராணம். மாக்கதை என்று சொல்லுகின்றார். ஏன் அப்படிச் சொல்லுகின்றார்? எண்ணிக்கையினால் இது பெரியபுராணம் அன்று; மிகவும் எளிமையாக வாழ்ந்தவர்களின் வரலாறுகள்தான் இந்தப் புராணத்தில் உள்ளன; இது திருத்தொண்டர் புராணம்.

ஞானத்தாயாகிய தமிழ்க்கிழவியும். ஞானபண்டிதனாகிய தமிழ்க் குழவியும் ஒரு சமயம் சந்திக்க நேர்ந்தது. "தாயே! உலகில் பெரியது எது?'' என்று வினவினார் ஞானபண்டிதஸ்வாமி.

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது"

என்றார் ஔவைப்பிராட்டியார்.

முருகப்பெருமான் அதனைக் கேட்டு, "ஓ! புவனந்தான் பெரியதோ?" என்றார்.

"புவனமோ நான்முகன் படைப்பு" என்று தமிழ்க்கிழவி கூறினார்.

"அப்படியானால் நான்முகன்தான் பெரியவனோ?" என்று வினவினார் முருகவேள்

'இல்லை, நான்முகனே கரியமால் உந்தியில் வந்தோன்" என்று தமிழ்ப்பாட்டி கூறினார்.

"ஓ! அப்படியாயின் கரியமால் பெரியவரோ?" என்று கேட்டார், தமிழ்க்கடவுள்

"இல்லை, இல்லை, கரியமாலோ அலைகடல் துயின்றோன்" என்று கூறினார் ஔவையார்.

"அலைகடல் பெரியது என்று கூறுகின்றாயோ?" என்று கேட்டார் செந்தமிழ்ப்பிரியர்.

"இல்லை கடலையும் குறுமுனி உண்டாரே?" என்று ஔவையார் கூறியதும்

"குறுமுனி பெரியவரோ" என்று கேட்டார் முருகவேள்.

"இல்லை, குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்" என்று ஔவையார் கூறினார்.

"கலசம் பெரியதோ?"
"கலசமோ புவியிற் சிறுமண்"
"புவி பெரியதோ?"

"புவியும் உலகைத் தாங்கும் அரவினுக்கு ஒரு தலைப் பாரம் தானே"

"அப்படியா அரவமாகிய ஆதிசேடன்தான் பெரியவனோ?"

"அதுவும் இல்லை, அந்த அரவம் உமையவள் சிறுவிரல் மோதிரம்தான்".

"பின்னே பெரியவர் யார்? உமையவள் பெரியவளோ?" என்று வினவினார் வேலவர்



"அப்படியும் இல்லை. ஏனெனில், உமை இறைவர் பக்கத்து ஒடுக்கம், அவ்வாறாயின் இறைவர்தாமே பெரியவர்?" என்றார் இளம்பூரணர்.

"இல்லை, இல்லை. இறைவரோ, தொண்டருள்ளத்து ஒடுக்கம். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றார் ஔவையார்.

அடியார்களின் பெருமையே அளவிட முடியாதது. பதினாயிரத்துக்கு மேற்பட்ட கவிகளுடைய இராமாயணம், பாரதம், கந்தபுராணம் என்ற நூல்களுக்குப் பெரியபுராணம் என்று பெயர் வரவில்லை. சுமார் நாலாயிரம் பாடல்கள் உள்ள திருத்தொண்டர் புராணத்துக்கே பெரியபுராணம் என்று பெயர் வந்தது.

உலகிலே எல்லாவற்றைக் காட்டிலும் பெரியது அடியார் பெருமையே.

உயர்ந்தது எது? இழிந்தது எது? என்ற ஆராய்ச்சிக்குப் புறநானூற்றிலும் விடை கூறப்பட்டுள்ளது.

"ஈஎன இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்,
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று, அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று."

ஒரு பொருளைக் கொடு என்று இரப்பது இழிந்தது, அவ்வாறு இரந்தோர்க்கு 'ஈயேன்' என மறுத்தலோ அதனினும் இழிவு; கேட்பதற்கு முன்னே குறிப்பறிந்து தானே விரும்பிக் கொடுத்தல் உயர்ந்தது; அவ்வாறு கொடுப்பினும் 'கொள்ளேம்' என்பது அதனினும் உயர்ந்தது.

நாயன்மார்கள் ஆண்டவனிடம், "கொடு" என்று எதையுமே கேட்டதில்லை. அவர்கள் நாடியதெல்லாம் "கூடும் அன்பினில் கும்பிடுதலே." பல ஆண்டுகளாக வந்தித்து வணங்கியும் அவர்கள் சிவபெருமானிடம் ஒன்றும் கேட்க

வில்லை. எனவே, பார்வதி தேவியாருக்கு ஓர் ஐயம் தோன்றிற்று. சிவபெருமானிடம் சென்று "பெருமானே! இந்த அடியார்கள் பல ஆண்டுகளாகக் கும்பிட்டும் ஒன்றும் கேட்கவில்லையே! அவர்களே வாய்விட்டுக் கேட்கவில்லை யாயினும் நீங்களாவது கொடுங்களேன்" என்று கேட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோளுக்கிரங்கிய சுவாமி, நாயன்மார்களை அழைத்து. "உங்களுக்குப் பரகதி தருகிறேன்" என்றார் பரகதி - மோட்சலோகம் என்பது சிறு பொருளா? அதனையே வேண்டாம் என்று கூறிவிட்டார்கள் நாயன்மார்கள். சிவபெருமான் அருளிய வீட்டுப் பேற்றையே வேண்டாம் என்று கூறியவர்களின் கதைகள் அல்லவா? அதனால்தான் பெரியபுராணம் என்றும், திருத்தொண்டர் புராணம் என்றும் "எடுக்கும் மாக்கதை" என்றார் சேக்கிழார் பெருமான்.

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்.
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்

காரைக்கால் அம்மையார் புராணம்

### ஆணவ மலத்தின் குணம்

தன்னையொழிய மற்றொருவரு மொவ்வாதவரென்று நினைப்பதும், யாதொன்றையுஞ் சங்கற்பிப்பதும், கோபம் பண்ணிக்கொண்டு நிற்கிறதும், விரோதம் நினைக்கிறதும், யாதொன்றுக்கு மாசைப்படுதலும், உயிரைக்கொல்லுதலும் துன்பம் வந்துற்றகாலத்து விசனப்படுதலும், யாதொன்று சொல்லுமிடத்தும் செய்யுமிடத்தும் அகங்காரமாய் நிற்றலும், யாதொன்றுக்கும் சிரித்துக்கொண்டு திரிதலும் ஆகிய குணங்களெட்டுமாம்.

உ
சிவமயம்



# நல்லூர்க் கைலாசநாதர் கோயில்



— க. சி. குலரத்தினம் —

## ஆலயங்கள் சைவமும் தமிழும் வளர்த்தன

யாழ்ப்பாணத்து நல்லூரிலே சிங்கையாரிய சக்கரவர்த்திகள் என்னும் தமிழரசர்கள் செங்கோலோச்சி வந்த காலத்திலே, பலவாய கோயில்களைப் புதிதாகக் கட்டியும் பழையனவாய பலவாலயங்களைப் புனரமைத்தும் சைவபரிபாலனஞ் செய்து வந்தார்கள்,

ஈஸ்வராலயங்கள் என்னும் சிவாலயங்களாயினும் இறைவியாலயங்கள் என்னும் அம்மன் கோயில்களாயினும் விநாயகராலயங்களான பிள்ளையார் கோயில்களாயினும் முருகனாலயங்களான கந்தசுவாமிகோயில்களாயினும் சைவம் பொலிய, தமிழ் வளர அருள்பாலித்த ஆலயங்களாகும். அங்கெல்லாம் திருநீறு, சந்தனம், வில்வம், உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்கள் களிநடஞ்செய்தனவாகும்.

ஆலய பரிபாலனத்தின் மூலம் சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் வளர்த்து வந்த பண்பாடு யாழ்ப்பாணத்துத் தமிழரசர் பண்பாடாகும். அவர்கள் காலத்தில் புறமதத்தவர்கள் எவரும் சைவத்தமிழ்த்துறைகளில் ஊடுருவல் செய்ததும் இல்லை செய்யத் துணிந்ததும் இல்லை. வியாபாரஞ் செய்வதற்கு வந்த வேற்று நாட்டவர், தத்தமக்கு விதிக்கப்பட்ட - அநுமதிக்கப்பட்ட நிலப்பரப்புகளில் வாழ்ந்து, கொள்ளல் விற்றல் ஆகியவற்றைக் குறைவறச் செய்தார்களேயன்றி, வேறு துறைகளில் அவர்கள் ஈடுபடவில்லை. சாதியிலும் சமயமே பெரிது என்று தூய சிந்தை நிறைவோடு வாழ்ந்தவர்கள் தமிழர். தமிழரிடையே சைவக்கோட்பாடு மிகவும் இறுக்கமாக நிலவியது.

## ஆன்மாக்கள் பசுக்கள், இறைவன் பசுபதி

சைவத்தமிழ் மக்களுக்கு மாடு நிறைந்த நிரந்தரமான செல்வம். மாடு என்றாலே செல்வம் என்பது கருத்து. காளை என்னும் ஆண்மாடாயினும், பசுவென்னும் பெண்மாடாயினும் சைவத்தமிழருக்கு அற்புதமான புனித சின்னங்களேயாம். வயலில் விளைவைத் தந்த சூரியபகவானுக்குப் பொங்கலிட்ட கையோடு மாடுகளுக்குப் பொங்கலிடும் மகத்தான பண்பாட்டு நாகரிகம் தமிழ் நாகரிகம்.

பசு என்றால் ஆன்மா என்றும் பொருள் பலவாய பசுக்களைப் பக்குவமாக மேயவிட்டு, ஓடி மீள்கென ஆடல் பார்த்திருப்பவன் பசுக்களுக்கு மேலானவனும் சொந்தக்காரனும் தலைவனுமாய பசுபதி. இறைவனுக்குரிய திருநாமங்களுள் பசுபதி என்பது அவன் எம்மை உடையவனாகையால் உண்டான திருநாமம். பசுக்களாகிய சைவத் தமிழர் பசுபதியாய பரமேட்டியின் உடைமைப் பொருள்கள். நாம் அடியேம். அவர் ஆண்டவன். அவர் எம்மை ஓடி மீள்கென ஆடல் பார்த்திருக்கும்போது, நாம் பட்டி மாடுகள் புல் வெளியில் மேய்ந்து நீர் நிலைகளில் நீரருந்தி, மரநிழலிற் படுத்திருந்து ஆறுதலாக அசைபோடுதல் வழக்கம்.

அசைபோடும் பசுக்களை நரிகள், ஓநாய்கள், புலிகள் தீண்டாமற் காத்து நிற்பவன் பசுபதியாய இறைவன். அவர் சம்மதத்துக்கு விரோதமாக நம் பசுக்கள் வேறுபுலம் புகுந்து, வேறு பட்டிகளுக்குரிய குறிகளைத் தாங்கி, நல்ல உணவும் போகபோக்கியங்களும் அநுபவிக்க முயலுதல், படைத்தல் காத்தல் முதலிய ஐந்தொழில்களுக்கும் பரமேசுவரனுக்கும் விரோதமாகும்

## நல்லூரின் சிறப்பு

இவ்வாறெல்லாம் உளங்கொண்ட எம்முன்னோர், சைவ சமயத்தில் தளராத பற்றுள்ளங்கொண்டு தாராளமாக வாழ்ந்த காலத்திலே, தமிழரசர் தலைநகரான நல்லூரிலே கோபுரமும் மதிலும் ஆழ்ந்த பெரிய திருக்கோயிலிலே கலி



யுகவரதனுய கந்தசுவாமியார் கோயில் கொண்டெழுந்தருளியிருந்தார். கந்தவேள் எழுந்தருளியிருந்த பழைய நல்லூர் மணிமாட அயோத்திபோல அழகாக அமைந்திருந்தது என்பர்.

நல்லூரைச் சூழ்ந்த நாற்றிசைகளுள் கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும், தெற்கில் கைலாசநாதர் கோயிலும், மேற்கில் வீரமாகாளி அம்மன்கோயிலும், வடக்கில் சட்டநாதர் கோயிலும் அமைந்திருந்தன. இவையாவும் இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னரே சீரும் சிறப்பும் பெற்று நிலவின.

## தெற்கில் அமைந்த கைலாசநாதர் ஆலயம்

தென்னாடுடையசிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன், எந்நாட்டவர்க்கும் இறைவன் தெற்கு நோக்கியே ஆடல் செய்கிறான். தெற்கு நோக்கிய மற்றொரு மூர்த்தமாய தட்சணா மூர்த்தம் சகல ஆன்மாக்களுக்கும் அறிவித்துறையை அபிவிருத்தி செய்து இருப்பதில் ஆனந்தமயமாயுள்ளது. இந்த முறையில் தமிழரசர் தலைநகரின் தெற்குத்திசையில் கைலாசபதியாய சிவபெருமான் கோயில் கொண்டிருந்தார்.

ஆரிய சக்கரவர்த்திகளுள் முன்னோடியான முடிமன்னன் தென்திசையில் கைலாசநாதர் கோயிலை அமைத்த விபரங்களை கைலாசமாலை, யாழ்ப்பாண வைபவமாலை முதலிய நூல்கள் கூறுகின்றன. நல்லூர்க் கைலாசநாதர் பெருமையைப் புலவர் ஒருவர் "கைலாச புரிவாச கவினேறு கணராசனே" என ஆராமையோடு பாடியுள்ளார்.

கைலாயநாதப்பெருமான் நல்லூரின் தென்பாகத்திலே கோயில் கொண்டருளிய அற்புத வைபவத்தையும், மத்திய காலத்துச் சைவத்தமிழ் மக்களின் மாட்சிமைப்பட்ட மதிப்புக்குரிய வரலாற்றையும் விரித்துக்கூறும் நூல் கைலாய

மாலை என்பதாகும். இதனைச் செய்தவர் செந்தியப்பர் என்பாரின் மைந்தர் முத்துராயர் என்னும் முதுபெரும் புலவராவர். இந்நூல் மாதகல் மயில்வாகனப்புலவர் செய்த யாழ்ப்பாண வைபவமாலையிலும் பார்க்கக் காலத்தால் முந்தியதாகும்.

## யாழ்ப்பாணத் தமிழரசின் பழைமை

உலகமெங்கும் குடியேற்ற நாடுகளைக்கொண்ட பிரித்தானியப் பேரரசு, உள்நாட்டிலேயே பிரித்தானியா என்று பெயர் பெறுவதற்குமுன், இங்கிலாந்து என்று ஒரு மாநிலத்திலே சுதந்திரமான ஓர் அரசினை நிறுவுவதற்கு முன்னர், ரியூடர் என்னும் வமிசத்தார் இங்கிலாந்தில் நிலையான ஆட்சியை நிலைநாட்டுவதற்கு முன்னர், யாழ்ப்பாணத்திலே ஓர் அரசினைப் பீடுபெற நிலைநாட்டிப் பெருமையோடு பரிபாலித்தவர் ஆரிய சக்கரவர்த்திகள் என்னும் தமிழ் மன்னர்.

## சிங்கையாரியன் கண்ட கனவு

இன்றைய வடமாகாணத்திலும் பார்க்கப் பரந்து விரிந்த பிரதேசத்தைப் பலவகை நலன்களும் உண்டாகப் பரிபாலித்த சிங்கையாரியன், அன்றொருநாள் மதுரை என்னும் கூடல்மாநகரிலே நடைபெற்ற கும்பாபிடேகத்தின் சிறப்பை நினைத்துக்கொண்டு பக்திப்பரவசத்தில் படுத்திருந்தான். பாதியுறக்கத்தில் அவன் பக்திப்பெருக்குக் காரணமாக ஒரு கனவு கண்டான்.

மாயனுக்கும் வேதனுக்கும் மாமறைக்கும் எட்டாத தூய பெரு ஞானச்சுடர்ப் பிழம்பாய பரமேசுவரன், சூரியப்பிரகாசமுள்ள தம்தூய திருவுருவை நீத்து, மானிட வடிவந் தாங்கி, காதிற் கடுக்கனும், கையிற் கங்கணமும், தோளிற் திருவலயமும், பாதத்தில் வீரக்கழலும் அணிந்து, செம்பொன்பட்டாடை உடுத்து, மகுடந்தரித்துத் தம்மனைவியார் என்று சர்வாபரணபூஷணியாய் எழில் சேர்ந்த பெண்



ணோடு எழுந்தருளி வந்து, "நம்பெயர் கைலாயநாதன்" எனக் கூறியருளினர். அந்த அற்புதக்காட்சி கண்டு, இறைவன் திருவாக்கைக் கேட்ட மாத்திரத்தில் அவன் நித்திரை குழம்பி எழுந்திருந்தான்.

## சிங்கையாரியன் தன் பழைய வரலாற்றைச் சிந்தித்தல்

இவ்வாறாக விழித்தெழுந்த மன்னன் தன்னைக் கேதாரநாதன் ஒளித்துநின்று ஆட்கொண்டான் என உள்ளம் பூரித்து, அவருக்குந் தனக்கும் நிகழ்ந்த ஒரு பழைய தொடர்பினை நினைவிற்கொண்டான்.

சோழ இளவரசனாகத் தான்வாழ்ந்த காலத்தில், தந்தையாரின் பணிப்பின் வண்ணம் தான் வடநாடு சென்று தக்க பண்டிதர்களிடம் வடமொழியை நன்கு கற்று, வடநாட்டு யாத்திரை செய்தபோது, ஆங்கே இமயமலையடிவாரத்தில் கேதாரநாதரை வணங்கி நின்றபோது, அவரை விட்டுப் பிரிய மனம் வராமற்போகவே, அவரைப்போல ஒருவரை அங்குள்ள கம்மியர்களைக்கொண்டு செய்வித்துக்கொண்டு நாடு திரும்பியதை நினைத்தான்.

நாடு திரும்பியதும் தான் வடக்கிலிருந்து கொண்டு வந்த கைலாசநாதரையும் கைலாயநாயகியையும் ஒரு மரத்தடியில் வைத்து, நாடோறும் பூசித்து வந்த காலத்திலே, பாண்டிநாட்டிலே படைக்கலப்பயிற்சி பழக்குவதில் கைதேர்ந்த பேராசான் ஒருவன், அரசிளங்குமாரர்களுக்கு வித்தைகள் கற்பிப்பதை அறிந்து, அங்கு சென்று அவன்பால் பல வித்தைகளையும் பயின்றதை நினைத்தான். அங்கே வித்தை பயின்றவர்களுள் மிகுந்த பராக்கிரம முற்றிருந்த தன்னை, யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பெரியவர்கள், தன்னிடம் அரச அடையாளங்கள் மிகவுளவாயிருப்பக் கண்டு தன்னைத் தந்தையார் அனுமதியுடன் ஈழநாட்டுக்கு அழைத்துச் சென்று, கங்காதர குருக்களைக்கொண்டு முடிசூட்டி அரசனாக்கிய சிறப்பை நினைத்தான்.

## கைலாசநாதருக்கு ஆலயம் அமைத்தல்

தான் இளமையில் இமயஞ்சார்ந்து ஈஸ்வரனை வணங்கியதும், அவரைப் பிரியமனமில்லாமல் அவரையும் தேவியாரையும் ஆகமமுறைப்படி செய்வித்து மீண்டதையும், அவர் அன்று தேவியாரோடு எழுந்தருளித் தன்னை ஆட்கொண்டதையும் சிந்தித்துத் தெளிந்து, ஆகமம்வல்லாரை அழைத்து, அடுத்துவந்த நல்ல நாளிலே ஆலயம் அமைக்க முயற்சி எடுத்தான். தனது தலைநகரான நல்லூரின் தென்பாகத்திலே விசாலமான நிலப்பரப்பிலே சுற்றுமதில்கள், கோபுரங்கள், மண்டபங்கள், சபைகள், பரிவார தேவர்கோட்டங்கள், யாகசாலை, திருமஞ்சனவாவி, மறையவர்விடுதிகள், திருமடங்கள், பூந்தோட்டங்கள், தேரோடும் வீதிகள் முதலியனவற்றைச் சிறப்புற அமைக்கச் செய்தான்.

## கைலாயநாதர் எழுந்தருளுதல்

தான் அழகுற அமைத்த ஆலயத்தில் எழுந்தருளச் செய்வதற்கு உரியவர், தன்னை உடையவரான கைலாயநாயகி சமேத கைலாயநாதப்பெருமானேயாவர் எனக் கங்காதரக் குருக்கள் முதலானோர் நினைவூட்டத்தான் பக்குவமாகச் சோழநாட்டிற் பூசித்த நாதனையும் நாயகியையும் விழாப் பொலிவோடு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்குமாறு தூதுவரைச் சோழராசாவிடம் அனுப்பினான். மைந்தனின் சிவபக்தியைக் கண்டும் கேட்டும் பெருமையுற்ற சோழன், கைலாயநாதரையும் நாயகியையும் அங்கிருந்து அனுப்பிவைத்தான்.

உரியவேளையில் நல்லூரில் வந்து சேர்ந்த சிவலிங்கப் பெருமானையும் பெருமாட்டியாரையும் நல்ல சுபவேளையிலே கங்காதரக்குருக்கள் கைலாயநாயகி சமேத கைலாயநாதர் என்னும் திருநாமங்கள் ஒலிப்பப் பிரதிட்டாபிடேகம் செய்து நிறைவேற்றினர். அச்சிறப்புக்களை நேரிற் கண்டின்புற்ற



தமிழ்நாட்டன்பர்கள் ''ஆகா வெள்ளிமயமான வடகைலாயம் ஒன்று, பொன்னின்மயமான சிதம்பராலயம் ஒன்று ஈழத் திருநாட்டில் கைலாயம் எனப்பெயர் பெற்றது இது ஒன்று'' என்று பாராட்டினூர்கள். எனவே இது மூன்ரும் கைலை என்று முன்னர் வழங்கிவந்தது.

## கைலாயநாதபிள்ளையார்

இன்று கைலாசநாதபிள்ளையார் எனவும் கைலாயபிள்ளையார் எனவும் திருநாமம் வழங்கப்பெருந்திருவுருவோடு அலங்காரமாக எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமான், பழைய கைலாயநாதர்கோயிலின் பரிவாரமூர்த்தியேயாவர். அவர் பின்னர் அமைக்கப்பெற்ற புதிய ஆலயத்தின் மூலமூர்த்தியாயினர்,

## போர்த்துக்கேயரின் அழிவுப்பாதை

ஐரோப்பாக் கண்டத்தின் பலநாடுகளில் போத்துக்கல் என்பதும் ஒன்று. பிறநாடுகளைச் சூறையாடுவதிலே சுவைகண்டவர் போத்துக்கேயர். அவர்களைப் பறங்கியர் என நம் நாட்டவர் வழங்கினர். போத்துக்கேயர் விரும்பியுண்ட மாட்டிறைச்சிக்குச் சுவையும் மணமும் ஊட்டிய கறுவாப் பட்டை முதலிய சரக்குகளை நேரில் கொள்வளவு செய்யப் புறப்பட்ட அவர்கள், 1505 ஆம் ஆண்டளவில் கொழும்பில் கால்வைத்தனர்,

அங்கே நாளடைவில் அதிகாரத்தையே பிடுங்கிய அவர்கள், தமிழரசார் நாட்டில் கால்வைப்பதற்கு நூறாண்டுகளுக்கு மேல் அஞ்சியொதுங்கியிருந்தனர். ஈற்றில் 1620 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தைச் சூறையாடத் தொடங்கி கோயில்கள், மடங்கள், வழிபாட்டிடங்கள் முதலியவற்றைத் தீயிட்டுக்கொளுத்தியும் இடித்துத்தகர்த்தும் தரை மட்டமாக்கினர். கண்ணிற் கண்ட பசுமாடுகளைத் துரத்திப்பிடித்துச் சுட்டுத்தின்று சுவைத்தனர்.

## கைலாயநாதர் இடம்பெயர்ந்தமை

யாழ்ப்பாணத்து நல்லூரின் அழகும் பொலிவும் கெட அடாதன செய்தபின் அயலில் உள்ள கைலாயநாதர் ஆலயத்திலும் சூறையாடப் போகிறார்களாம் என்னும் செய்தி பரவியது. அது கேட்டு மனம் நொந்த கோயிற்குருக்கள், அன்று அர்த்தசாமப்பூசையை அவசரம் அவசரமாகச் செய்துவிட்டு, அயலிலே கிடைத்த சிறிய தள்ளுவண்டியொன்றை நன்றாகக் கழுவிச் சுத்தஞ்செய்து, அதிலே கைலாயநாதப் பெருமானையும் கைலாயநாயகிப் பெருமாட்டியையும் ஏற்றி, இரவோடிரவாகத் தமது சொந்த ஊராய மட்டுவில் பதிக்குக் கொண்டுபோக முயன்றார்.

பெரும்பாரத்தைத் தாம் தனித்து இழுத்துப்போக முடியாமற்போகவே, அவர், அம்பிகையைத் தூக்கித் தீர்த்தக் கிணற்றில் மெதுவாக இறக்கிவிட்டுச் சிவலிங்கப்பெருமானை வண்டியில் வைத்தபடி இழுத்துச்சென்று. விடியற்காலையில் மட்டுவிலையடைந்து, அங்கே பல காலம் திருத்துவாரின்றி சீரழிந்து கிடந்த சிவாலயம் ஒன்றின் தீர்த்தக்கிணற்றில் தாம் கொண்டுவந்த சிவலிங்கப்பெருமானை இறக்கி வைத்தார்.

இவ்வாறாகப் பலவருடங்கள் சென்றபின், ஒருநாள் அவ்வூரில் வாழ்ந்த பெரியவர் ஒருவர் கனவிற் கண்டவண்ணம், திருக்கோயிற் பாழ்ங்கிணற்றில் சிவலிங்கப்பெருமானைத் தேடியெடுத்து அக்கோயிலைப் புதுக்கி அதிலே அவரைப் பிரதிட்டைசெய்து, சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசர் என வணங்கி வந்தனர்.

## கைலாயநாதர் கோயில் பட்டபாடு

பறங்கியர் திட்டமிட்டபடி கைலாயநாதர் ஆலயத்தைத் தரைமட்டமாக்கிவிட்டுப் போனபின், அந்த இடம் கற்குவியல்கள் நிறைந்து எருக்கும் அரளியும் முளைத்துப் புற்றும்



புதருமாகக் கிடந்தது: முப்பத்தெட்டு ஆண்டுக்கால முடிவில், ஒல்லாந்தர் என்பார் போத்துக்கேயரை வென்று துரத்தித் தாம் ஆண்டுவந்த காலத்தில், இவர்களுக்குக் கோட்டைகள் கட்டுவதற்குக் கற்கள் பெருந்தொகையாகத் தேவையாயிருந்தது.

ஒல்லாந்தர் கைலாயநாதர் கோயிலடியிற் கற்குவியல்களைக் கிளறி எடுத்த வேளையில், நம்மவர்கள் கண்ணுக்குப் பெருவிருந்தாகக் கிடைத்த திருவுருவம் விநாயகப் பெருமானின் சிலாவிக்கிரகமாகும்: பிற்காலப் பாண்டியர் காலத்தில் தமிழ்நாட்டுக் கம்மியர் செய்த அழகொழுகும் திருவுருவங்களில் இந்த விநாயகப்பெருமான் திருவடிவமும் ஒன்றாகும்.

## கைலாசநாத பிள்ளையார்

கண்ணிற் கண்ட கணபதியைக் கைகூப்பித் தூக்கியெடுத்த தமிழர், அவரை அவ்விடத்திலேயே ஒரு வில்வ மரத்தடியில் வைத்து நாடோறும் பூசித்து வந்தார்கள்; ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தில் கடுமிடுக்குள்ளவராயிருந்தவராயினும். நாளடைவில் நமக்கு ஓரளவு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கினார்கள், அக்காலத்திலேதான் இன்றைய நல்லூர்க்கந்தசுவாமி கோயில் முதலான பெருங்கோயில்கள் எழுந்தன.

வில்வமரத்தடியில் மறுமலர்ச்சிக் காலத்திலே எழுந்தருளிய பிள்ளையாருக்கு முதலில் கொட்டில் அமைத்தவர் அயலில் வாழ்ந்த ஆறுமுகநாவலரவர்களாவர்: அவர் கொட்டில் அமைத்த காலம் 1850-ஆம் ஆண்டளவிலாகும் என்பர்: அவர் தமக்கு வாழ்வளித்த விநாயகப்பெருமான் திருவருளை வியந்து போற்றிய பாடல் ஒன்றுண்டு.

"சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
னரும்பொருளைச் சிவனுர் தந்த
பேர்பூத்த திருமலசின் மயவடிவை
யானந்தப் பெருக்கை யென்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன்முதற்புங்
கவர்வணங்கும் கருணை வாழ்வைப்
பார்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம்."

ஆறுமுகநாவலர் அவர்களின் அண்ணன்மார் ஐவருள் ஒருவரான தம்பு என்பாரின் மைந்தர் பெயர் கைலாசபிள்ளை. கைலாயபிள்ளையார் கோயிலை மண்டபங்கள் முதலிய அழகுகளோடு அமைக்க முற்பட்டவர் திரு. த. கைலாசபிள்ளையாவர்.

கைலாயபிள்ளையாரை மூலமூர்த்தியாகத் தாபித்து அமைக்கப்பெற்றுள்ளதே இன்றைய கைலாயபிள்ளையார் கோயில் எனவேதான் இந்த இடம் கைலாசபிள்ளையார் கோயிலடி எனப் பெயர் பெறுவதாயிற்று. காலந்தோறும் அழகுபெறக் கட்டடங்கள், மண்டபங்கள் எழுந்தபோது, பழையபடி கைலாயநாதரையும் கைலாயநாயகியையும் இங்கே எழுந்தருளச் செய்தல் வேண்டும் என்னும் விருப்பங்கொண்டனர் ஒரு சிலர்.

## கைலாசநாதர் பழையபடி எழுந்தருளல்

இறைவனையும் இறைவியையும் பரிவாரமூர்த்தங்களாக எழுந்தருளச்செய்தல் ஆகமவிதிகளுக்கு விரோதமான செயலாகும் எனச் சிலர் சுட்டிக்காட்டியதும் உண்டு. கைலாசபிள்ளை அவர்கள் கட்டிய கோயிலைப் பெருப்பித்து, அகலித்து, அழகுபடுத்தியவர்களுள் இராமலிங்கம் என்னும் பெரியாரும் ஒருவராவர். இன்னும் சுந்தரம் என்பாரும் மதுரையப்பா என்பாரும் மகத்தான பணிபுரிந்தனர் என்பர், சுந்தரத்தார் மறைவின் பின் அவர் தம் தங்கையார் மாணிக்கம் என்னும் மாதரசியார் செய்த மகத்தான சேவை



மிகப்பெரிது என்பர், இவர்கள் காலத்தில் குமாரசுவாமிக் குருக்கள் என்பார் கோயிற்காரியங்களைக் குறைவறச் செய்துவந்த அருமையை முதியவர் பலர் இன்றும் பாராட்டுவர். குமாரசுவாமிக்குருக்கள் அவர்களுக்குப் பின் அவர் தம் குமாரர் குருசுவாமிக்குருக்கள் கோயிற்பரிபாலனத்தைப் பொறுப்பேற்றிருந்தார். இவருக்குப் பின் இவர் குமாரர் சர்மா என்பார் பூசனை புரிந்து வந்தார்.

இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற மகாகும்பாபிடேக வைபவத்தை முதியவர் பலர் கண்ணில் நீர்மல்கப் போற்றுகிறுர்கள். அக்கும்பாபிடேகத்தை ஆகமவிதிக்கமைய அருமையாக நிறைவேற்றி வைத்தவர் மாணிக்கம் அம்மையாராவர். அக்கும்பாபிடேக காலத்திலேதான் இத்திருக்கோயிலே சிவலிங்கப்பெருமானை பிரதிட்டை செய்துவைத்தார்கள்,

## ஆலயத்தின் அழகுமிக்க அற்புதத்தேர்

கைலாயநாதபிள்ளையாருக்கு அழகுமிக்க அற்புதமான சித்திரத்தேரை அலங்காரமாகச் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இருபதாண்டுகளுக்கு முன்னர் சுறுசுறுப்பாக நடைபெற்று, மாணிக்க அம்மையாரின் சகோதரர் சோமசுந்தரம் அவர்களால் சிறப்புற நிறைவேற்றப்பெற்றன.

## சுந்தரலிங்கம் அவர்களின் தொண்டு

முன்னுள் கணிதப்பேராசிரியரும், வர்த்தகமந்திரியாரும் வவுனியா பிரதிநிதியுமான செ. சுந்தரலிங்கம் அவர்களின் தூயதொண்டின் பெருமையால் இத்திருக்கோயிலில் பஞ்சமுக விநாயகப்பெருமான் அழகாக எழுந்தருளியுள்ளார். இன்னும் விநாயகப்பெருமானை நேரில் தரிசிப்பதற்கு வசதியாக மேலதிக கோபுரவாசலும் அமைந்துள்ளது. இன்னும் திருக்கோயிலின் அற்புதத்தேர்மண்டபமும் அழகாக அமைந்துள்ளது.

# யோகர்சுவாமிகளின் திருவருளும் பொற்கிழியும்

திருமுறைகளின் சிறப்பை யோகசுவாமிகளும், மற்றும் பெரியோர்களும் பலவாருகப் புகழ்ந்து பேசுவதை அறிந்த புலவர் ஒருவர் அவற்றைப் பயபக்தியுடன் ஓதி வந்தார். ஆனல் என்ன காரணத்திஞலோ அவரது வறுமை அவரை விட்டு அகன்றதாக இல்லை, ஒரு நாள் அவர் சுவாமிகளைக் காணவந்தார். அவரைக் கண்டதும், சுவாமி தமது நகைச் சுவை நிறைந்த தொனியில், “வாரும் ஐயா, புலவரே பொற் கிழி பெற வந்தீரா?” என்ருர். மேலும், “நல்லது சுந்தர மூர்த்தி நாயஞரின் தேவாரங்களைப் பாடும்; பல சந்தர்ப்பங் களில் அவர் இறைவனிடம் உதவி கேட்டுப் பெற்றவரல்லவா?” என்ற சுவாமிகளது பணிப்புரையைக் கேட்ட புலவர் அவ் வாறே பாடிஞர். இரண்டு மூன்று மணித்தியாலங்கள் பாடிஞர். அதன்பின் சுவாமிகள், “இப்பொழுது உமக்குப் பொற் கிழி தரவேண்டுமே? என்ன செய்வது?” எனக் கூறிய அதே வேளையில்; வாசலில் ஒரு கார் வந்து நின்ற சப்தம் கேட்டது. அதிலிருந்து ஓர் அன்பர் கையில் ஒரு பாசலுடன் வந்தார். அதனைச் சுவாமியின் பாதகாணிக்கையாக வைத்து, சுவாமியை வணங்கிஞர். “இது எனக்கல்ல. உவருக்குக் கொடு” என்று சுவாமி சொல்ல, அன்பரும் அவ்வாறே செய்தார். அதனை விரித்துப்பார்த்த புலவர் ஆச்சரியத்தில் தன்னை மறந்து, “சுவாமீ” என அலறிவிட்டார். ஏனெனில் அப்பாசலில் பதிஞெரு பொற்காசுகள் இருந்தன.

சுவாமியின் அருளால் சிங்கப்பூருக்கு நல்ல வேலை யொன்றின் நிமித்தம் சென்ற அந்த அன்பர் தனது வருமானத்தில் ஒவ்வொரு மாதமும் ஒரு பொற்காசை சுவாமிக்குச் செலுத்தவென வாங்கி வைத்தார். வருட இறுதியில் சுவாமியை நேரிற்கண்டு காணிக்கையாகச் செலுத்திவிட்டுப்போக எண்ணிக்கொண்டு வந்துள்ளார்.

என்னே சுவாமியின் அருள் வெள்ளம்!
என்னே திருமுறையைப் பயபக்தியுடன் பாடிய அன்பர் பெறும் பெரும்பேறு!

உ
கணபதி துணை



# கைலாசப் பிள்ளையார் ஊஞ்சல்

இயற்றியவர்:

சுன்ஞகம், அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள்

[ முத்துராசகவிராயர் இயற்றிய கைலாயமாலை என்னும் நூலின் இறுதியில் நல்லூர் த. கைலாசபிள்ளை அவர்களால் விசுவாவசு ஆண்டு பங்குனி மாதம் - 1905 இல் பதிப்பிக்கப்பெற்ற பழைய நூலிற் கண்டவண்ணம் இங்கே தரப்பெறுகிறது. ]

**காப்பு**

மாமேவு மீழவள நாட்டின் மேன்மை
மருவுவட திசையமர் யாழ்ப்பாணந் தன்னிற்
காமேவு மெழினல்லை நகரி வாழுங்
கைலாச விநாயகனுக் கூஞ்ச லென்னும்
பாமேவு மொருமாலை புனைந்து சாத்தப்
பரம்பொருளா மெவ்வுயிர்க் குங்கருணை பூத்துத்
தேமேவும் யானைமுகங் கொண்டு தோன்றுந்
தேவனவன் பாதமலர் சென்னி வைப்பாம்.

**ஊஞ்சல்**

ஆரணமு மாகமுந் தூண்க ளாக
அறிவரிய சிவஞானம் விட்ட மாக
ஏரணவு நால்வாக்குங் கயிற தாக
ஏற்றமிகு முபநிடதம் பலகை யாகப்
பேரணவும் பிரணவமே பீட மாகப்
பிறங்கியநல் லூஞ்சலின்மே லினிது வைகிக்
காரணவுங் கோபுரஞ்சேர் நல்லை வாழுங்
கைலாச விநாயகரே யாடி ரூஞ்சல்

சென்னியுறு மணிமகுட மிருள்கால் சீப்பத்
　　தேவர்சொரி மலர்மாரி திசைகள் தூர்ப்ப
மன்னுமுற சாதியவாச் சியங்க ளார்ப்ப
　　மறையவர்கள் வேதவொலி விண்மண் போர்ப்ப
மின்னிடையார் சித்தியொடு புத்தி யென்று
　　விளம்புமிரு சத்திகளும் பாங்கின் மேவக்
கன்னல் வயல்சூழ் நல்லைநகரி வாழுங்
　　கைலாச விநாயகரே யாடீ ரூஞ்சல்.

உமையொடுமந் தாகினிக்கு மகவே யாகி
　　உருவாதி மூன்று மிறந்தப்பா னின்ற
அமலபரி பூரணமாம் பொருளே யென்கோ
　　அஃறிணையு முயர்திணையும் வடிவ மென்கோ
இமையவர்கள் யாவருமாய் நின்றீ ரென்கோ
　　யாதென்கோ நும்விளையாட் டேவர் தேர்வார்
கமலையுறை தருநல்லை நகரி வாழுங்
　　கைலாச விநாயகரே யாடீ ரூஞ்சல்

மாவுலகும் பல்லுயிருந் நுங்கைக் குள்ளே
　　வதிந்திடன்மோ தகக்கரத்தால் வாய்ப்பக் காட்டித்
தாவுமொரு மூஷிகவா கனத்தாற் றீமை
　　தந்திடுமா னவக்குறும்பு சாய்த்தல் காட்டித்
தேவுலக நிகர்நல்லை நகரி மீ
　　சிங்கையா ரியனென்னுஞ் செங்கோல் கொண்ட
காவலன்செய் திருக் கோயில்வாச மேவுங்
　　கைலாச விநாயகரே யாடீ ரூஞ்சல்

வாசவனோ டமரர்களைப் பெரிதும் வாட்டி
　　வருத்தமிகப் புரிந்தகய முகனை வீட்டித்
தேசுபெறும் பொன்னுலகங் கவர்க்கு நாட்டிச்
　　சிந்திப்போர்க் கிடர்க ளெல்லாந் திரவோட்டி
நேசமிகு வல்லவையைப் பாங்கிற் கூட்டி
　　நீளறுகு கொன்றை மலர்முடியிற் சூட்டிக்
காசினியோர் புகழ்நல்லை நகரி மேவும்
　　கைலாச விநாயகரே யாடீ ரூஞ்சல்.

ஆவலொடு நந்தவன மமைப்போர் வாழ
　　அலர்பறித்து மாலைதொடுத் தளிப்போர் வாழப்
பூவலருங் குளங்கேணி சமைப்போர் வாழப்
　　புராணமுறை படிப்பவர் கேட்போர்கள் வாழச்
சேவையொடு பூசைவிழாப் புரிவோர் வாழத்
　　திருப்பணிக்குப் பொருளுதவி செய்வோர் வாழக்
காவலரு நாவலருஞ் சேரு நல்லைக்
　　கைலாச விநாயகரே யாடீ ரூஞ்சல்



அடியரிடர் களைபவரே யாடீ ரூஞ்சல்
　　அரிசாபந் தவிர்த்தவரே யாடீ ரூஞ்சல்
வடிவுகுணங் கடந்தவரே யாடீ ரூஞ்சல்
　　மன்னுலக காரணரே யாடீ ரூஞ்சல்
தடமருப்பொன் றுடையவரே யாடீ ரூஞ்சல்
　　சர்வவிக்ன விநாசனரே யாடீ ரூஞ்சல்
கடியமர்நந் தனவனங்கள் சூழு நல்லைக்
　　கைலாச விநாயகரே யாடீ ரூஞ்சல்

அஞ்சினர்க்கு முன்னவரே யாடீ ரூஞ்சல்
　　அறுமுகர்க்கு முன்னவரே யாடீ ரூஞ்சல்
வஞ்சகருக் கினியாரே யாடீ ரூஞ்சல்
　　வலவைதனக் கினியாரே யாடீ ரூஞ்சல்
வஞ்சியுமை பாலகரே யாடீ ரூஞ்சல்
　　வாய்த்தகண பாவகரே யாடீ ரூஞ்சல்
கஞ்ச மலர்த் தடநல்லை நகரி வாழுங்
　　கைலாச விநாயகரே யாடீ ரூஞ்சல்

## வாழி

சந்தமறை முறைதெரியந் தணர்கள் வாழி
　　தகுஞ்சுரபி யினம்வாழி முகிலும் வாழி
விந்தைமிகு மன்னவர்செங் கோலும் வாழி
　　மெல்லியலார் கற்பினொடு தருமம் வாழி
ஐந்தெழுத்தோ டக்குமணி பூதி வாழி
　　அநுதினமுஞ் சைவநெறி தழைத்து வாழி
கந்தமலர்ப் பொழினல்லை நகரி வாழுங்
　　கைலாச விநாயகனா ரருளும் வாழி.

## சிவபெருமானுடைய அருள் மூர்த்தங்கள்

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆத்துமாவாகிய அட்டமூர்த்தங்களும், மகேசுர வடிவங்களாகிய லிங்கோற்பவர் முதல் கங்காதரமூர்த்தி ஈறாகவுள்ள இருபத்தைந்து மூர்த்தங்களும், பிரமன் முதல் சிவம் ஈறாகவுள்ள ஒன்பது மூர்த்தங்களும் சிவஸ்தலங்கள் பலவற்றுள்ளும் எழுந்தருளியிருக்கும் மூர்த்தங்களும், சிவபூஜை செய்யத் தக்க மூர்த்தங்களாம்.

யா… கல்லூரி
…ச்சேரி

# மனக்கவலை மாற்றவழி

— பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை —

உலகத்துள்ள ஒவ்வொருவரும் உயர்ச்சியை உவக்கின்றனர். உயர்ச்சியும் அவரவர் முயற்சியளவாகவே அமையும். நீர் அளவாக நீராம்பல் நீளுவதுபோல உள்ளத்தின் ஊக்கத்தின் அளவாக உயர்ச்சி ஓங்கும்.

"வெள்ளத் தனைய மலர்மீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு"

என்பது வள்ளுவர் வாக்கு. முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பது முதுமொழி.

ஆனால் ஊக்கமுடன் உழைப்போரையும் உயரவிடாது உலைவிக்கின்றன உறுகண்ணாகிய விக்கினங்கள். விக்கினங்களும் வெள்ளம் போல வேகமாக வரும்.

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்"

என்பது வள்ளுவரின் மற்றொரு வாக்கு.

துன்பவெள்ளம் கெடத் தும்பிக்கையான் பாதத்தை நம்பி உள்ளத்தில் உள்ள வேண்டும்.

உள்ளத்தின் உள்ளலாவது எம்பெருமான் திருவடியை இடையறாது தியானித்தலாகும்.

இடையறாது தியானிப்பவர்களின் இடர்கெடச் சிவபெருமான் திணைக்களம் ஒன்றைச் செயற்படுத்தி இருக்கிறார்:

வியட்டிப் பிரணவமாகிய உமை பெண்யானையாகவும் சமட்டிப் பிரணவமாகிய தாம் ஆண்யானையாகவும் வடிவு கொண்டு வழிபடுபவர்களுடைய இடர்களைக் கடிகின்ற கணபதி வர அருள்செய்து அவரையே திணைக்களத்தின் தலைவராக நியமனஞ்செய்து விக்கினேஸ்வரர் எனப் பெயருஞ் சூட்டி,

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோல் ஆக்குதி அலதுஉனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதிநீ"

என்று கந்தபுராணம் காட்டும் உபவிதியையும் உதவி உத்தியோகத்தமர்த்தினர்.

விக்கினேஸ்வரர் — விக்கினங்களை நீக்குபவர். விக்கினங்களைத் தருபவர்.

வியட்டி சமட்டிப் பிரணவங்களின் வரிவடிவை யானைகளில் வைத்துக்காட்டியிருக்கின்றனர் கச்சியப்பசிவாசாரியர்.

வியட்டிப் பிரணவம் உகார மகார அகாரமாய் (உமா) என உமையைக் குறிக்கும். சமட்டிப் பிரணவம் அகார உகார மகாரமாய் (ஓம்) என சிவனைக்குறிக்கும் என்பது அக்கினி புராணம்.

ஆதியாகியே ஓங்கிய தனி எழுத்து ஒன்று இரண்டதாய்த் தூங்கிய கைமலை போலத் தோன்றும் என்றும் மூலமாயுள்ளதோர் மன்பெருந் தொல்பொறி ஈருருவுறீஇ ஆனைபோலப் பொருந்தும் எனவும் கூறும் கந்தபுராணம்.

ஆனைபோல் அணுகும் எனவே இரு பிரணவங்களும் சேர இருமையின் ஒருமையாய் உதித்தனர் ஓங்காரமூர்த்தியாகிய விக்கினேஸ்வரர் எனவே விக்கினேஸ்வரர். சிவனின் வேறல்லர் என்பது வெள்ளிடைமலை.

இதனைக் கந்தபுராணத்தில் ஐந்தொழிலுஞ் செய்யும் சிவபெருமான் தேவரீரே என தேவர்கள் குறிப்பிட்டு தோத்திரிக்கும் வகையில் பின்வரும் பாடலில் காண்க.

"காப்பவன் அருளும்மேலோன் கண்ணகன் ஞாலம்யாவும்
தீப்பவன் ஏனைச்செய்கை செய்திடும் அவனும்நீயே
ஏப்படும் செய்கைஎன்ன எமதுளம் வெதும்பும் இன்னல்
நீப்பது கருதி என்றே நீயருள்வடிவங் கொண்டாய்"

இவ்வுண்மையைத் திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரம் தெளிவுபடுத்துகிறது.

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

விக்கினேஸ்வரப் பெருமானைவேண்டி விக்கினங்களினின்றும் விடுபடுவோமாக.

தொண்டர் பெருமை
போற்றி வாழ்வோம்!

# Renuka Industries

Importers, Exporters, Manufacturers of
Aluminiumwares

170, 172, OLD MOOR STREET
COLOMBO - 12

Phone: 35579


# திருவருள் கிடைக்கும் இடங்கள்

அவுஸ்திரேலியா:

திரு. சு. சண்முகமணி அவர்கள்
11' Melville St., West Ryde, New South Wales, 2114

இங்கிலாந்து:

திரு வை மூத்துக்குமாரசுவாமி அவர்கள்
4. Thurleigh Court, Nightingale Lane,
LONDON S. W. 128 A. P., U, K, Tel: 01-675-3698

சிங்கப்பூர்: திரு. K. அம்பலவாணர் அவர்கள்
1011, G Lange Road, Singapore 19-54,

இந்தியா: திரு, T பாலசுப்பிரமணியம் அவர்கள்
வீரப்பன் தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம்.

இலங்கையில் —யாழ்ப்பாணம்:

திரு. க. இளையதம்பி அவர்கள்
திருவருள் இயக்கம், 30, வைமன் வீதி, நல்லூர்.

கொழும்பு:

திருவருள் இயக்கம், 5, கன்னாரத்தெரு, கொழும்பு-13
கிறீன்லண்ஸ் ஹோட்டல், கொழும்பு-4.

மட்டக்களப்பு:

சிவநெறிச்செல்வர், வே. சு. சுப்பையா அவர்கள்
C/o Dr. W. வேல்முருகு அவர்கள்
14, சென்றல் ரோட், மட்டக்களப்பு.

கிளிநொச்சி:

தவத்திரு வடிவேற் சுவாமிகள்
மகாதேவா ஆச்சிரமம், உருத்திரபுரம்.

ஊர்காவற்றுறை:

சோ. தியாகராஜபிள்ளை
பாலக்காட்டுச் சந்தி, கரம்பன் கிழக்கு.

திருக்கேதீஸ்வரம்:

தவத்திரு. சரவணமுத்து சுவாமிகள்
திருவாசக மடம்,

நுவரெலியா:

உயர்திரு. R. K. முருகேசு சுவாமிகள்
ஸ்ரீ சிவபாலயோகி மகாராஜ் அறங்காவலர் குழு,
82, லேடி மக்கலம் டிரைவ், நுவரெலியா.

திருகோணமலை:

தொண்டர் சண்முகராஜா
அருள்நெறி மன்றம், திருகோணமலை

வத்தளை:

திரு. S. பத்மநாதன்,
370/9, நீர்கொழும்பு வீதி, வத்தளை.

கிணற்றைச் சுத்தஞ் செய்வதில்
தனக்கும் பிறருக்கும் பயன்தர வாழும்
மீன் போன்றவர்களே தொண்டர்கள்

VENGATESHWARA

93, KEYZER STREET,

COLOMBO-11

Telephone: 24588

வெங்கடேஸ்வரா

93, செய்சர் வீதி, கொழும்பு-11



அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீந்தலரிது. ... திருக்குறள்

K. Sundaram & Co.

DAVEE'S ENTERPRISE

No. 83, Mihindu Mawatha

COLOMBO-12

புதிதாக வியாபாரத்தில் கால் வைக்கும்
எம்மை முன்னணிக்குக் கொண்டுவர
திருவருளை வேண்டுகிறோம்.

# Arthik Hardware

GENERAL HARDWARE MERCHANTS

**303-A, Old Moor Street,**
**Colombo-12**

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நற்பணிக்கே உதவுகிறது. மில்க்வைற் தயாரிப்புகளைப் பாவித்து அவற்றின் மேலுறைகளை அனுப்பி அழகிய சுவாமிப் படங்கள், தேவாரப் புத்தகங்கள் காந்தி சிலை, துவாய் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

—மில்க்வைற் யாழ்ப்பாணம்

# மில்க்வைற்தொழிலகம்

தபாற்பெட்டி: 77 யாழ்ப்பாணம்

இலங்கை

தொலைபேசி: 7233

209


எமது நல்வாழ்த்துக்கள்!

மெர்கண்டைல் கிறெடிற் லிமிடெட்

51, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு-1

தொலைபேசி: 26611-9

கிளைகள்:

யாழ்ப்பாணம், அநுராதபுரம்,
கண்டி, மாத்தறை.


"ஞானம், யோகம், கிரியை சரியை
என்னும் நான்கும் இறைவனது
திருவடிப் பணிகளாக, இவற்றைப்
பூண்போர் சிவனடியாரே யாவர்"

— சிவஞானசித்தியார்


R.M.P. PULAMADAN Chetty & Sons Ltd.

MEENAMBIKAI OIL MILLS

KELANIYA

Telegrams: "AREMPIE"

Telephone No. 075-321
075-322

அவரவர்க்கமைந்த சமயத்தை அவரவர்
அநுட்டித்து வரற்பாலர்.
எந்தச் சமயத்திலும் வெறுப்பில்லாதவன்
எவனோ அவனே உண்மைச் சமயி

— ஆறுமுகநாவலர்


# ஸ்ரீநிவாசன்ஸ் கோ., லிமிற்றெற்

ஏற்றுமதியாளர்கள் :

182, குமார வீதி : : கொழும்பு

தபாற்பெட்டி எண் 673 தொலைபேசி : 24843

டெலெக்ஸ்: 21244 : 26575



Printed at The Vipulananda Press, 248/5, K. K. S. Road, Jaffna & Published by Mr. R. Vaithamanithy of No. 5, Brassfounder's Street, Colombo-13, for and on behalf of Thiruvarul Association
Cheief Editor: Mr. V, Sathasivam M. A. 4-7-82.